Ragistered as ...

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 22 (04 - 06 - 1992) வியாழக்கிழமை ஓசை: 107

யாழ்ப்பாணம்

## பத்திரிகையாளர் உரிமையை அரசு நசுக்கிறது

சிறிலங்கா அரச அதிகாரிகள் தமக்கு நெருக்கடி கொடுத்துவருவதாகக் குற்றம்சாட்டும் பல நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர் நேற்றுக் கொழும்பு நகரில் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். சுதந்திரச் செய்தி அமைப்பிற்கான பிரச்சாரக் குழு ஒன்றையும் அவர்கள் அமைத்தார்கள். அரசு தமது சுதந்திரத்தை மெல்ல நசுக்கி வருவதாகவும், நாட்டில் என்ன நடக்கிறது என்பதை அறியும் உரிமை நாட்டுமக்களுக்கு உள்ளதென்றும் பத்திரிகையாளர் தரப்பில் கூறப்படுகிறது. அரசு பத்திரிகையாளர்களுக்கு மாத்திரமல்ல பத்திரிகைகளின் உரிமையாளர்களுக்கும் நெருக்கடி கொடுத்து வருவதாக (4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



இளங்கோ

கடந்த 29-ம் திகதி மாமடு சிறிலங்கா காவலரண்கள் தகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்று வந்த இளங்கோ (சுரேஸ்மன்) வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (புதுக்குளம் சாத்திரி கூழாங்குளம்- வவுனியா) நேற்றையதினம் வீரச்சாவடைந்தார்.



விஜிதரன்

அலம்பில் சந்தியை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடன் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மோதலில் ...

## யுத்த சூன்ய பகுதியில் குண்டு வீச்சு

# சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யுத்த சூன்யப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள சேந்தான் குளத்திலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்கள் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுவீசித் தாக்கியது சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப்புலிகள் கடும ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து உணவுப்பொருள்களைக் கொண்டுவருவதற்காக சேந்தான்குளம் காங்கேசன் வீதி யுத்த சூன்யப் பிரதேசமாகச் செயற்பட்டது. இப்பகுதியில் சிறிலங்கா ஆயுதப் படைகளோ அல்லது விடுதலைப் புலிகளோ போர் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்றும், அவ்வாறு போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றால் 72 மணிநேர முன் அறிவித்தல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குக்கொடுக்கப்படவேண்டும் என்றும் ஒரு உடன்பாடு காணப்பட்டது. இவ்வுடன்பாட்டில் சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் கைச்சாத்திட்டிருந்தன.

கடந்த 1 ஆம் திகதி சிறிலங்காவின் குண்டுவீச்சு விமானங்கள் சேந்தான்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்கள்மீது தாக்குதலை நடத்தியபோது நான்கு போராளிகள் காயமடைந்தனர். இந்த நடவடிக்கை ஒரு பாரதூரமான ஒப்பந்த மீறல் சம்பவமாகச் சுட்டிக்காட்டி யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிக்குக் கடிதம் ஒன்றைக் கையளித்தார்.

## 270 அதிகாரிகள் 6900படையினர் இரண்டு வருட போரில் காயம்

[கொழும்பு[

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் 1990 ஜூன் முதல் இன்று வரை 6900 இராணுவத்தினர் 270 இராணுவ அதிகாரிகளும் ... கள் வழங்கப்படுகின்றன என்று ஒரு இராணுவ அதிகாரி தெரிவித்தார் இவர்கள் முப்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு வகை ... கேடியர் துரைராஜாவும், புனர்வாழ்வுப் பிரிவுக்கு பிரிகேடியர் பெர்னான்டோவும் பொறுப்பாக உள்ளார்கள்.

இன்னும் சில மாதங்களில் ...

### வடக்கு-கிழக்கு அரச செயலகங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கென நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் அரச செயலகங்கள் திருக்கோணமலை, கந்தளாய், சம்பாந்துறை, வவுனியா, வவுனியா தெற்கு, உகணை ஆகிய இடங்களிலேயே அமைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோமாரியில் தாக்குதல் 16 பேர் பலியாகினர்

[கோமாரி]

கோமாரியில் பஸ் பிரயாணிகள் மீது இனந்தெரியாதோர் நடாத்திய தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் ஒருவர் பொலிஸ் எனவும் பெரும்பான் மையோர் முஸ்லிம்கள் எனவும் தெரிய வருகிறது.

### ஆறுமாத காலத்திற்குள்

## தெல்லிப்பழை யுத்தத்தில் இராணுவக் கப்டன் பலி

(கொழும்பு)

கப்டன் ரஞ்சித் சுறங்கா குணசேகரா தெல்லிப்பழை யுத்தத்தில் மே 30 ஆம் திகதி அன்று கொல்லப்பட்டார். இவரது சடலம் இராணுவத்தினரால் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

## காணாமற் போனோர் இருவர் மட்டுமேயாம்

(யாழ்ப்பாணப்)

வேலணைப் பகுதியிலிருந்து இரண்டு பேர் மட்டுமே காணாமற்போயிருப்பதாக கூட்டுப் படைத்தலைமையகம் கூறியுள்ளது. இவர்களில் ஒருவர் மண்கும்பானைச் சேர்ந்தவர் எனவும் மற்றவர் நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் வேலணை உதவி அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வேலணைப் பகுதியில் சுமார் 164 பேர் காணாமற்போனோர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

[75]



## விஜிதரன்

அலம்பில் சந்தியை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடன் நடந்த முதலாம் திகதி நடைபெற்ற மோதலில் 2-ம் லெப்டினன்ட் விஜிதரன் (விஜித்) மகேந்திரன் கருணகுமார் (5-ம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சி) வீரச்சாவடைந்தார்.



## லெப். ஈழவன்

நேற்று அதிகாலை யாழ். பத்தைமேனிப் பகுதி இராணுவ காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட அருள் 89 தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினருடன் ஏற்பட்டமோதலில் லெப்டினன்ட் ஈழவன் (பிறேம்) ஐயாத்துரை சண்முகேஸ்வரன்-(தேவராலி, கரவெட்டி வடக்கு) வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த இம் மூன்று வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

## பீரங்கித்தாக்கு

தொண்டமனாறு, வல்வெட்டித்துறைக் கடற்பிராந்தியங்களில் இருந்து கடற்படையினர் கரையோரத்தை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் நடத்தியுள்ளனர். எனினும் சேதவிபரம் எதுவும் தெரிய வரவில்லை. [75]

---

சேந்தான்குளம் காங்கேசன் வீதி யுத்த சூன்யப் பிரதேசமாகச் செயற்பட்டது. இப் பகுதியில் சிறிலங்கா ஆயுதப் படைகளோ அல்லது விடுதலைப் புலிகளோ போர் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்றும், அவ்வாறு போர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றால் 72 மணிநேர முன் உடன்பாடு காணப்பட்டது. இவ்வுடன்பாட்டில் சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் கைச்சாத்திட்டிருந்தன.

கடந்த 1 ஆம் திகதி சிறிலங்காவின் குண்டுவீச்சு விமானங்கள் சேந்தான்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் ஊரீ இந்த நடவடிக்கை ஒரு பாரதூரமான ஒப்பந்த மீறல் சம்பவமாகச் சுட்டிக்காட்டி யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி தமிழ்ச்செல்வன் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிக்குக் கடிதம் ஒன்றைக் கையளித்தார்.

# 270 அதிகாரிகள் 6900படையினர் இரண்டு வருட போரில் காயம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் 1990 ஜூன் முதல் இன்று வரை 6900 இராணுவத்தினர் 270 இராணுவ அதிகாரிகளும் காயப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வடபகுதியில் இப்போது நடைபெறும் யுத்தத்தில் காயப்பட்ட இராணுவத்தினரும் காயப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அடங்குவர்.

காயப்பட்டவர்களுக்குப் பலவிதமான தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்று ஒரு இராணுவ அதிகாரி தெரிவித்தார் இவர்கள் முப்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு வகையான தொழில் துறைகளில் பயிற்றப்படுகிறார்கள்.

பிரிகேடியர்கள் பேர்னான்டோவும், துரைராஜாவும் இராணுவத்தில் தொழிற் பயிற்சிப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரிகளாக உள்ளார்கள் காயப்பட்டவர்களை உடன் கவனிக்கும்பிரிவுக்கு கேடியர் துரைராஜாவும், புனர்வாழ்வுப் பிரிவுக்கு பிரிகேடியர் பேர்னான்டோவும் பொறுப்பாக உள்ளார்கள்.

இன்னும் சில மாதங்களில் இராணுவம் செயற்கைக் கால் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ராகமத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இராணுவத்துக்கெனப் புறம்பாக 'ரணவிருசேவன்' என்ற பெயரில் மருத்துவ மனை ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, காயப்பட்ட இராணுவ வீரர்களைப் பராமரிக்க போதிய மருத்துவ வசதிகள் இல்லை என்று இராணுவத்தரப்பில் சொல்லப்படுகிறது, அறுவை வைத்திய மருத்துவர்களும் மயக்க மருந்து நிபுணர்களும் யுத்தப் பிரதேசங்களை அடுத்த பகுதிகளில்உள்ள மருத்துவமனைகளில் இல்லாததால் பாரிய காயங்களுக்குள்ளான இராணுவத்தினர் பலர் இறந்துள்ளதாகவும் அதேவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# புலிகளின் கப்பலிலிருந்த எரிபொருள் விற்பனை

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் டொங்கோவா கப்பலிருந்து கடலோர கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட டீசல்,மற்றும் பெற்றோல் என்பவற்றை தமிழக நுகர் பொருள் வாணிபக்கழகம் விற்பனை செய்துள்ளது. இதன் மூலம் பெறப்பட்ட நாற்பத்தியாறாயிரம் ரூபா பணம் விசேட நீதிமன்ற நீதிபதி எம்.எம் சித்திக்கிடம் ஒப்படைக்கப்படடிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழர் மதுரையில் கைது

(சென்னை)

மதுரைக்கு அருகே பரசுராம்பட்டி என்னுமிடத்தில் சண்முகம் என்னும் இலங்கைத் தமிழ் வாலிபர் ஒருவர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரிடமிருந்து கள்ள ரூபாய் நோட்டுக்கள் அச்சிடுவதற்கான காகிதங்கள் மற்றும் இரசாயனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், இவர் இலங்கையில் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.

# புலிகளுடன் தொடர்பு; பம்பாயில் இருவர் கைது

(பம்பாய்)

விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் சிலர் பம்பாயில் கைதுசெய்யப்பட்டனர்.

பம்பாய் நகரத்தில் குமரன் என்பவரின் பெயரிலிருந்த குடியிருப்பு ஒன்றைச் சோதனையிட்ட பொலிஸார் அங்கு ராஜசேகரன் என்னும் பெயருடைய ஒருவரின் பிளாஸ்டிக் கவரிடப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்க அங்கத்தவர் அட்டை உட்பட மற்றும் சில ஆவணங்களைக் கண்டுபிடித்தனர் எனவும், இவ்வீட்டில் குடியிருந்த குமரன் புலிகள் இயக்கத்தின் அனுதாபி எனவும் கூறப்படுகின்றது

அத்துடன் குமரனுக்குநெருங்கிய நண்பர் எனக் கூறப்படும் பிரதிமாதாஸ் என்னும் வங்காளப் பெண்மணி ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

---

சங்கள் திருக்கோணமலை, கந்தளாய், சம்பாந்துறை, வவுனியா, வவுனியா தெற்கு, உகணை ஆகிய இடங்களிலேயே அமைக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருவர் மட்டுமேயாம்

(யாழ்ப்பாணப்)

வேலணைப் பகுதியிலிருந்து இரண்டு பேர் மட்டுமே காணாமற்போயிருப்பதாக கூட்டுப் படைத்தலைமையகம் கூறியுள்ளது. இவர்களில் ஒருவர் மண்கும்பானைச் சேர்ந்தவர் எனவும் மற்றவர் நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் வேலணை உதவி அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வேலணைப் பகுதியில் சுமார் 164 பேர் காணாமற்போனோர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. [75]

# கோமாரியில் தாக்குதல் 16 பேர் பலியாகினர்

[கோமாரி]

கோமாரியில் பஸ் பிரயாணிகள் மீது இனந்தெரியாதோர் நடாத்திய தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் ஒருவர் பொலிஸ் எனவும் பெரும்பான் மையோர் முஸ்லிம்கள் எனவும் தெரியவருகிறது.

### ஆறுமாத காலத்திற்குள்

# இராணுவ உயர் அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மாற்றம்

இராணுவ உயர்அதிகாரிகள் மட்டத்தில் ஆறு மாதங்களுக்கிடையில் பல மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது

மாற்றங்கள் வரும் ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வருமென இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன சீவ் ஒவ்-ஸ்ராவ் மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி டி. சில்வா ஜூலை 30ஆம்திகதி இராணுவ சேவையிலிருந்து இளைப்பாறவுள்ளார். ஜூன் முதலாம் திகதி இராணுவ சேவையிலிருந்து இளைப்பாறவிருந்த இவருக்கு ஜூலை 30 வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி டி.சில்வா இளைப்பாறுவதற்கு முன் சிறிலங்கா இராணுவ தொண்டர் படையின் தளபதி மேஜர் ஜெனரல் பாலரெட்ணராஜா ஜூலை முதலாம் திகதி ஒய்வு பெறுகிறார். வடக்கில் 2-வது இராணுவப் பிரிவுக்குத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல்டென்சில் கொப்பேகடுவவினதும், கிழக்கில் 3-வது பிரிவுக்குத் தளபதியாக இருக்கும் ஜெலி சில்வாவினதும் பதவிக்காலம் இந்த வருட இறுதியுடன் முடிவடைகிறது பொதுவாக ஒரு மேஜர் ஜெனரல் நியமனதிகதியிலிருந்து மூன்று வருடகாலம் மட்டும்தான் இப் பதவியில் இருக்க முடியும்.

தற்போது சிறிலங்கா இராணுவத்திலுள்ள ஐந்து மேஜர் ஜெனரல்களில் நான்கு பேரின் பதவிக்காலம் அடுத்த ஆறு மாதங்களுக்கிடையில் முடிவடைகிறது முதலாவது பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் திலக் பரணகமவின் பதவிக்காலம் மாத்திரம் 1993 நடுப்பகுதியில் முடிவடைகிறது.

மேஜர் ஜெனரல்கள் ஒய்வு பெறுவதால் ஏற்படவுள்ள வெற்றிடங்கள் நான்கு முதுநிலை பிரிகேடியர்களால் நிரப்பப்படவுள்ளன. ஆனால் இந்த நான்கு பிரிகேடியர்களின் பெயர்களும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளதாம். இந்த மாற்றங்களைத் தொடர்ந்து வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ அதிகாரிகள் தரத்தில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

# மக்கள் மீதான குண்டுத் தாக்குதல்; கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## -நாளை பொது நிறுவனங்கள் நடாத்துகின்றன

சிறிலங்கா அரச படைகள் பொது மக்களின் இலக்குகள் மீது கண்மூடித்தனமாக நடாத்திவரும் குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்து யாழ். மாவட்டத்தின் சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொதுசன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், சமய ஸ்தாபனங்கள் ஆகியன இணைந்து நாளை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்த உள்ளன. இப் பேரணியில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. ஊர்வலத்தின் முடிவில் யாழ் செயலகத்தில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட உள்ளது.

அதே வேளை சர்வ சமய சமுதாய ஒன்றியம் எதிர் வரும் 9ஆம் திகதி மாலை 5-00மணியளவில் பிரார்த்தனை நிகழ்ச்சி ஒன்றையும், மாலை 6-00 மணியில் இருந்து 6-05 மணி வரை சகல ஆலயங்களிலும் மணி ஒலி எழுப்புவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறது இவ் ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இன்று காலை 9-00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் விசேட கூட்டம் ஒன்றை மேற்படி அமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது. (22)

**கேட்டினைத் தவிர்க்க காட்டினை வளர்ப்போம்**

## வரி விளம்பரம்

### மீண்டும் புதிதாய் பிறப்போம

மீரா வெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய புதிய நாவல் விற்பனையாகிறது. "சோதனைகள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தாலும் மனம் தவறாத இந்த மண்ணின் மைந்தர்களின் கதை" (2625)

## ஊழியர் சங்கம் கண்டனம்

(மண்டைதீவு)

தெல்லிப்பளை துர்க்கை அம்மன்கோவிலுக்கு விமானப் படை விமானங்கள் குண்டுவீசி அழிக்கப்பட்டதற்கும் அங்கு இருந்த பக்தர்களுக்கும் அகதிகளிற்கும் உயிரிழப்பும் காயமும் ஏற்பட்டதற்கும் வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. (88)

## தீவக மாணவர் கவனத்திற்கு

1990 1991 டிசம்பர் க.பொ.த (சா) பரீட்சைகளுக்கு யாழ் நகரப்பகுதியில் தோற்றிய. நயினாதீவு, நெடுந்தீவுக் கோத்தணிகளைச் சேர்ந்த மாணவர்களில். நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செய்முறை பரீட்சைக்குத் தோற்ற விரும்பவர்கள் உடனடியாகத் தன்னைச் சந்திக்குமாறு வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர். திரு. சி. புவேந்திரன் அவர்கள் அறிவிக்கிறார்.

## அதிபர்களின் சம்பளம்மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

அதிபர்களின் தரங்களுக்கு ஏற்ப சம்பளத்தை நிர்ணயிப்பதற்காக அனைத்து ஆசிரியர் தொழிற் சங்கங்களின் சந்திப்பு வரும் 26-இல் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கத்தின்வேண்டுகோளுக்கிணங்க கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது. இத்தகவலை இ த ஆ சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொது செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

# பேராசிரியர் செல்வநாயகம் நினைவுப் பேருரை

அமரர் பேராசிரியர் சோ. செல்வநாயகம் எமது பிரதேசத்திற்கும் எமது இனத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் ஆற்றிய பணியை எவராலும் மறக்கமுடியாது. அமரர் செல்வநாயகம் இட்டுச் சென்றபாதையை நம் இப்போது தொடர்கிறோம்.

இவ்வாறு2ஆம்திகதியாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அமரத்துவம் அடைந்த பேராசிரியர் சோ.செல்வநாயகத்தின் 8-ஆவது ஆண்டு நினைவுப பேருரையில் துணைவேந்தர் அ.துரைராஜா குறிப்பிட்டார்.

1977 முதல் 1979 வரை யாழ் பல்கலைக்கழக புவியற்றுறை பேராசிரியராக இருந்த இவர் புவியற்றுறையை மேம்படுத்த அரும்பாடுபட்டவர். அதுமட்டுமல்லாது புவியற்றுறையில் புதிய தொழில் நுட்பங்களை புகுத்தியதுடன் வேறுபல திட்டங்களை அமுல் நடத்திய பெருமையைப் பெற்றவர் பேராசிரியர் சோ.செல்வநாயகம் என்றால் மிகையாகாது என்றார்.

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பாலசந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ் பேருரையில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில் ;

தமிழனுக்கு ஒரு பல்கலைக்கழகம் தேவை என்பதை உணர்ந்து அதற்காக பாடுபட்டவர் என்ற பெருமையை தேடியவர் அமரர் செல்வநாயகம் தான் இவர் பல்கலைக்கழக பணியில் மட்டுமல்லாது சமூகஅபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி போன்ற துறையிலும் மக்களுக்காக நின்றுபாடுபட்டவர்.

தொடர்ந்து இந்தநினைவுப் பேருரையில் கலைப்பீடாதிபதி பொ.பாலசுந்தரம்பிள்ளை அறிமுகவுரை நிகழ்த்தினார்.

இந் நிகழ்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பி 'யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்'' எனும் தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்தினர். இவ் வைபவத்தில் யாழ்.கச்சேரி ஊழியர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும். மாணவர்களுமாக பெருந்திரளானோர் பங்கு பற்றி சிறப்பித்தமை குறிப்பிடததக்கது. (05)

யாழ். இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கப்

# ஆசிரியர் சம்பள உயர்வு அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அவர்கள் தமது அந்தஸ்தைப் பேணக்கூடியதாக அமையவில்லையெனவும் அவர்களின் அந்தஸ்தைப் பேணக்கூடியதாக சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமெனவும், சகல ஆசிரியர் சங்கங்களும் இணைந்து விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வுக்குழு ஏற்றுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற இறுதிக் கலந்துரையாடலில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதோடு, பின்வரும் முடிவுகளும் ஏகமனதாக சம்பளமீளாய்வுக் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

தற்போது சேவையிலிருக்கும் நிரந்தர ஆசிரியர்களின் அதிநிறைந்த சம்பளம் ரூபா 2750/-ஆக உயர்த்தப்படும். 10 வருடத்திற்குள் குறைந்த பயிற்றப்படாத சகல ஆசிரியர்களும் இச்சம்பளத் திட்டத்தில நியமிக்கப்படுவர்

10 வருடத்திற்கு மேற்பட்ட பயிற்றப்படாத ஆசிரியர்களும், ஆறு வருடத்திற்கு குறைந்த பயிற்றப்பட்ட ஆசிரியராக சேவை செய்தவர்களும் ரூபா 3000/- ஆரம்பச் சம்பளமாகவுள்ள ஆசிரியர் சேவை வகுப்பு -4ல நியமிக்கப்படுவர்.

6 வருடத்திற்கு கூடிய பயிற்றப்பட்ட ஆசிரியர் சேவையுடையவர்களும, 7 வருடத்திற்குக் குறைநத சேவையுடைய பட்டதாரி ஆசிரியர்களும் ரூபா 3500/- ஆரம்ப சம்பளமாக உள்ள ஆசிரியர் சேவை வகுப்பு -3ல நியமிக்கப்படுவர்.

12 வருடத்திற்கு மேற்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையுடையவர்களும், 7 வருடத்திற்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும் ரூபா 4600/- ஆரம்பச் சம்பளமாகவுடைய ஆசிரிய சேவை வகுப்பு -2ல் நியமிக்கப்படுவர்

20 வருட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையுடையவர்களும், 14 வருட சேவையுடைய பட்டதாரி ஆசிரிர்களும் ரூபா 6000/- ஆரம்பச் சம்பளமாகவுள்ள ஆசிரியர் சேவை வகுப்பு -1ல் நியமிக்கப்படுவர்.

புதிய திட்டத்தின் அடிப்படையில் ஆசிரியரின் அதிகுறைந்தசம்பளம் ரூபா 2750/- ஆகவும் அதி உயர்ந்த சம்பளம் ரூபா 9000/- ஆகவும் அமைந்துள்ளது ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் 30 வருட சேவை முடிக்கும் பொழுது அதி உச்சச் சம்பளமாகிய ரூபா 9000/- த்தைப் பெறுவார். ஒரு பட்டதாரி ஆசிரியர், 24 வருட சேவையில் அதி உச்சச்சம்பளமாகிய ரூபா 9000/- பெறுவார்.

சம்பளத் திட்டம் தற்போது சேவையிலிருக்கும் ஆசிரியர்களுக்கு மாற்றியமைக்கப்படும் போது சேவை மூப்புக்கேற்ப சம்பளப்படியுயர்ச்சியும் வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டதாரி ஆவதன் மூலமும் பட்டதாரிகள கல்வி டிப்புளோமாப் பட்டம் பெறுவதன் மூலமும் அல்லது பல்கலைக்கழகங்களில் இரண்டாம் நிலைப் பட்டங்களாகிய முதுமாணி பட்டத்தைப் பெறுவதன் மூலமும் குறுகிய கால இடைவெளியில் அடுத்த ஆசிரிய சேவை வகுப்புக்கு சுயமாகவே பதவியுயர்வு பெறுவார்.

தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் / இவ்வருடம் நியமிக்கப்படவிருக்கும் பயிலுநர் ஆசிரியர்கள், பட்டதாரி பயிலுனர்கள் தொழில்சார் பயிற்சி அழிக்கப்பட்டு முறையே ஆசிரிய சேவை 4 லும் 3லும் நியமிக்கப்படுவர். எனினும் எதிர்காலத்தில் பயிலுனர்கள் என்ற ரீதியில் எவரும நியமிக்கப்பட மாட்டார்கள். இம் மீளாய்வுக் குழுவின் சிபார்சுகளை கல்வி அமைச்சரான ஜனாதிபதி அமைச்சரவையின் அங்கீகாரததிற்கு சமர்ப்பிப்பார்.

# தோட்டங்கள் தனியார் மயம் தொழிலாளர் புறக்கணிக்கப்படுவர்

(இராகலை)

தோட்டங்கள் தனியாருக்கு கையளிக்கப்படுவதால் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கபபடும் சுகாதாரம்.வீட்டுவசதி. தண்ணீர் வசதி நிரந்தரவேலை சம்பள உயர்வு கல்வி ஆகியன ஒன்று சேர கவனிக்கப்படமாட்டாத நிலைவரபபோகிறது

இவ்வாறு நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரதனா அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் பத்தாண்டு நிறைவு விழாவையொட்டி இராகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோட்டங்களை தேசியமயமாக்கிய பொழுது நாவலப்பிட்டி பஸ் நிலையத்திலும் ஏனைய இடங்களிலும் தொழிலாளர்கள் பிச்சை எடுத்து வாழும் நிலை ஏற்பட்டது இதனை நாம் பலமாக கண்டித்தோம் இதனால் சிலர் நாலாவது மாடிக்கு கொண்டு செல்லபபட்டனர்.

பதுளையில் புலிகள் என அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டபோது பாராளுமன்றில் வாசுதேவ நாணயக்கார குரல் எழுப்பினர். உண்மையான புலிகளை பிடித்துக் கொடுங்கள் நாங்கள் அவர்களை விட்டு விடுகிறோம் என ஆட்சியாளர்கள் கூறுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கம் எதிர் நோக்கும் மூன்று முட்டுக் கட்டைகள்

- பிரேமதாசா விளக்கம்

அரசாங்கம் அதன் முயற்சி

# ஆலயங்கள் மீது குண்டுவீச்சு பல்கலைஆசிரியர் கண்டனம்

வடபகுதியில் பிரசித்தி பெற்ற இரண்டு இந்துத் திருத்தலங்கள் மீது நடாத்தப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் குண்டுத் தாக்குதலை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அடைக்கலம் தேடி கோயிலில் தஞ்சமடைந்திருந்த பக்தர்கள் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டது அறத்திற்கு முற்றிலும் முரணானதும் மனித பண்புகளை மிதிக்கின்ற செயலுமாகும்.

இவ்வாறு மேற்படி சங்கம் இராணுவத் தாக்குதலுக்குட்பட்ட வற்றாப்பளை கண்ணகை அம்மன், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆகிய திருததலங்கள் மீது நடாத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் கூறப் பட்டிருக்கிறது இத்தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் அதே வேளையில் மேற்படி தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி இச் சங்கம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.


யாழ்ப்பாண மாநகரசபை

உணவுப் பொருள் தயாரிப்பாளர்களைப்

**பதிவு செய்தல்**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கீழ்க்காணும் உணவுப்பொருட்கள் மற்றும் பானங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் நிறுவனங்களும் தனியாரும் எதிர்வரும் 11 - 06 - 1992 ஆம் திகதிக்கு முன்பாக தமது தயாரிப்புக்கள் மற்றும் பெயர் விபரங்களை இலக்கம், 107 கண்டி வீதியிலுள்ள யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து தமது அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாதவர்களின தயாரிப்புக்கள் அனைத்தும் மாநகரசபை எல்லைக்குள் விற்பனை செய்யப்படுவது முற்றாகத் தடைசெய்யப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்

தயாரிப்புக்கள்:

குளிர்பானங்கள், இனிப்பு வகைகள், பைக்கற் செய்யப்பட்ட உணவுப்பண்டங்கள், பொது மக்களின் விநியோகத்திற்காக உணவு தயாரிக்கும்நிலையங்கள்.

மாநகர ஆணையாளர்,
யாழ்பபாணம்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 03 - 06 - 1992. (4507)


## நினைவுகூருகின்றோம்...

### 1992-06-04

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**ஆனந்தன்** (மாரிமுத்து மாதவன் - உதயநகர், கிளிநொச்சி )

திருக்கோணமலையில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சீனன்வாடிப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 5 தமிழர்கள் - ஆண்டான்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதிகள்.

கிளிநொச்சி, ஆனந்தபுரம் பகுதியில் சிறிலங்காப்

வேந்தர் அ.துரைராஜா குறிப்பிட்டார்.

1977 முதல் 1979 வரை யாழ் பல்கலைக்கழக புவியற்றுறை பேராசிரியராக இருந்த இவர் புவியற்றுறையை மேம்படுத்த அரும்பாடுபட்டவர். அதுமட்டுமல்லாது புவியற்றுறையில் புதிய தொழில் நுட்பங்களை புகுத்தியதுடன் வேறுபல திட்டங்களை அமுல் நடத்திய பெருமையைப் பெற்றவர் பேராசிரியர் சோ.செல்வநாயகம் என்றால் மிகையாகாது என்றார்.

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பாலசுந்தரம்பிள்ளை பொ.பாலசுந்தரம்பிள்ளை அறிமுகவுரை நிகழ்த்தினார்.

இந் நிகழ்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பி 'யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்'' எனும் தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்தினர். இவ் வைபவத்தில் யாழ்.கச்சேரி ஊழியர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், மாணவர்களுமாக பெருந்திரளானோர் பங்குபற்றி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (05)

...தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும் சுகாதாரம்.வீட்டுவசதி. தண்ணீர் வசதி நிரந்தரவேலை சம்பள உயர்வு கல்வி ஆகியன ஒன்று சேர கவனிக்கப்படமாட்டாத நிலைவரப்போகிறது.

இவ்வாறு நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரதனா அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் ... கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோட்டங்களை தேசியமயமாக்கிய பொழுது நாவலப்பிட்டி பஸ் நிலையத்திலும் ஏனைய இடங்களிலும் தொழிலாளர்கள் பிச்சை எடுத்து வாழும் நிலை ஏற்பட்டது இதனை நாம் பலமாக கண்... செய்யப்பட்டனர்.

பதுளையில் புலிகள் என அப்பாவி மக்கள் கைதுசெய்யப்பட்டபோது பாராளுமன்றில் வாசுதேவ நாணயக்கார குரல் எழுப்பினார். உண்மையான புலிகளை பிடித்துக் கொடுங்கள் நாங்கள் அவர்களை விட்டு விடுகிறோம் என ஆட்சியாளர்கள் கூறுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசாங்கம் எதிர் நோக்கும் மூன்று முட்டுக் கட்டைகள்

## - பிரேமதாசா விளக்கம்

அரசாங்கம் அதன் முயற்சிகளில் மூன்று முட்டுக்கட்டைகளை எதிர் நோக்குகிறது. வெளிநாட்டு சக்திகளின் தலையீடு. பாரிய குற்றவாளிகளின் பயமுறுத்தல், சுரண்டல்காரர்களின் செல்வாக்கு என்பனவே அவையாகும். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மதவாச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இனப்பிரச்சினையில் ஒரு தலைபட்சமாகத் தீர்மானங்களை எடுக்க விரும்பவில்லை. 1987ஆம் ஆண்டில் இவ்விதம் எடுக்கப்பட்டதீர்மானங்களின் விளைவை நாம் அறிவோம். முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் அழைப்பை ஏற்று வெளிநாட்டுப் படை இங்கு வர நேர்ந்தது. வெளிநாட்டு இராணுவத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவார்கள் என்பதை அறிந்தே இந்த நடவடிக்கையை தாம் விரும்பவில்லை என பிரேமதாசா மேலும் தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் வடக்கு-கிழக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு காட்டப்பட்ட கரிசனை முற்றிலும் போதாது என்றே கூறவேண்டும். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் சமூக நீதிக் கோட்பாடுகளுக்கு அமைய செயற்பட்டன என்று சொல்வது கடினம் எனவும் அவர் தெரிவித்தார்.

# மலையக தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கிலம் போதிப்பதற்கு சிங்கள ஆசிரியர் நியமனம்

[நாவலப்பிட்டி]

மத்திய மாகாணத்தில் பெருந் தோட்டப் பகுதிப் பாடசாலையில் பயிலும் தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிக்கச் சிங்கள மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் தமிழ் மாணவருக்குத் தமிழில் விளக்கம் அளிக்க முடியாமல் உள்ளனர்.

தமிழ்மொழி பேசுபவர்களால் மட்டுமே அவர்களுக்கு மொழி விளங்க ஆங்கிலம் கற்பிக்க முடியும். இது இப்படியிருக்க மேற்கண்ட விதமான பிறமொழி ஆசிரியரின் நியமனம் தமிழ் மாணவர்களுக்கு பிரயோசனமாக அமையவில்லை எனப் பெருந்தோட்டப் பகுதிப் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

# முன்மாதிரியான மெய்வன்மைப் போட்டி

யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாலயமும் யாழ். வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி ம.மகாவித்தியாலயமும் இணைந்து நடாத்தும் இல்லமெய் வன்மைப் போட்டி வெள்ளிக்கிழமை (05-06-1992) அன்று பி.ப. 2 மணியளவில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக புனர்வாழ்வு. புனரமைப்புச் செயலகத்தின், செயற்றிட்டப் பணிப்பாளர் கலந்து கொள்கிறார். இரு பாடசாலைகளும் ஒன்றிணைந்து சத்தியம்,சிவம் சுந்தரம் என்ற மூன்றில்லங்களின் கீழ் முன்மாதிரியாக நடாத்தும் இப்போட்டி ஒரு நல்ல முன் எடுத்துக்காட்டாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# தோட்டத்துறை தனியாரிடம் வாக்குறுதி அமுலில்லை

## - தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி கண்டனம்

பெருந் தோட்டத்துறை நிர்வாகங்கள் தனியார் கம்பனிகளிடம் கையளிப்பது தொடர்பான வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் தொழிற் சங்கங்களுக்குக் கொடுத்த வாக்குறுதி இதுவரை அமுல்படுத்தவில்லை.

இது தொடர்பாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைச் சந்தித்து அவரின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வருவதென தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி அண்மையில் கூடி முடிவெடுத்துள்ளதுடன் இது தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தனியார் மயமாக்கப்படும்போது தொழிற் சங்கங்கள், புதிய கம்பனிகள், அரசாங்கம் என்பன இணைந்து முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது என்று உறுதியளிக்கப்பட்டது. அத்துடன் தோட்டத் தொழிற்றுறை அமைச்சர் ரூபா கருணாதிலகாவும் தோட்டப்புறத் தொழிற் சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடாத்தி மேற்கண்ட அடிப்படையில் செய்வதாகவும் ஏற்றுக் கொண்டார். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேலும் அட்டன், பதுளை. நுவரெலியா, கண்டி, மாத்தளைப் பகுதியில் தோட்ட நிர்வாகம் தனியாரிடம் கையளித்தால் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கூட்டங்கள் நடாத்தி தொழிலாளர் மத்தியில் தெளிவை ஏற்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு முதல் கூட்டம் அட்டனில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.


யாழ். இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கப்

பொதுக்கூட்டம்

இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம்: 28 . 06 . 92 (ஞாயிறு)

நேரம்: காலை 9.00 மணி

★ சங்க உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படமாட்டாது. இவ்வறிவித்தலையே அழைப்பிதழாகத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுக.

★ உறுப்பினர்கள் தங்களுடைய உறுப்பினர் அட்டைகளை 15 06-92ஆம் திகதிக்கும் 19-06-92ஆம் திகதிக்குமிடைப்பட்ட காலப்பகுதிக்குள் சங்கப் பணிமனையில் தவறாது பெற்றுக் கொள்ளுக.

★ பொதுக் கூட்டத்திற்கான பிரேரணைகளை அனுப்ப விரும்பும் உறுப்பினர்கள் தயவுசெய்து 17-06 92ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் கௌரவ செயலாளருக்கு அனுப்பி வைக்குக.

★ மதிய உணவு அன்பளிப்பு ரூபா 25/-. மதிய உணவில் பங்கு கொள்ள விரும்பும் உறுப்பினர்கள், தயவு செய்து இத்தொகையை 23-06-92ஆம் திகதிக்கு முன்னர் சங்கப் பொருளாளரிடம் செலுத்தியுதவுக என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- சுந்தரம் டிவகலாலா
கௌரவ செயலாளர்.

(சி-4502)



எமது புதிய வெளியீடுகள்

1 சிவாஜி - சிவா - மோகினி
சின்ன மருமகள்

2 ராஜசேகர் - விஜயசாந்தி
எவன் என்றால் எனக்கு என்னடா ?

3 பிரசாந் - ரோஜா
செம்பருத்தி

குறிப்பு: புதிய படங்கள் யாவும் புத்தம்புதிய கசெட்டில் பதிவுசெய்து வாடகைக்கு கொடுக்கின்றோம். அத்துடன் புதிய கசெட்டில் பதிவு செய்த புதிய படங்களும் விற்பனை செய்கின்றோம்.

(சி/4501)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்



நினைவுகூருகின்றோம்...

1992-06-04

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய

ஆனந்தன் (மாரிமுத்து மாதவன் - உதயநகர், கிளிநொச்சி )

திருக்கோணமலையில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சீனன்வாடிப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 5 தமிழர்கள் - ஆண்டான்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதிகள்.

கிளிநொச்சி, ஆனந்தபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட வான் தாக்குதலின்போது எறிகணை வீட்டிற்குள் வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5-குழந்தைகள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுமுத்திரை கொண்டுவரும் பணியின்போது கிளிநொச்சியில் வைத்து சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலினால் பாரவண்டியுடன் எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட யாழ். செயலக ஊழியர் இருவர்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் பத்தாவது நாளாக மேற்கொண்ட 'ஒப்பறேசன் லிபறேசன்' நடவடிக்கையின்போது பிரளையார் கோவிலினுள் தஞ்சமடைந்திருந்த நிலையில் பட்டினியால் மடிந்த 4 வயதுக் குழந்தை.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ராகவன் | கிரிக்குமார் (மனுவல் அந்தோனிதாஸ் - கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு )

அலெக்ஸ் (மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேச விரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு ஏறாவூர்ப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட -

★ மயிலு (சிவலிங்கம் மயில்வாகனம் - செங்கல்லடி, மட்டக்களப்பு.)

★ செல்வரத்தினம் (செங்கலடி, மட்டக்களப்பு.)

அரியாலை தபால்பெட்டிச் சந்தியில் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய -

ஜெயராஜ் (வடிவேல் நந்தகுமார் - 35 ஆம் கிராமம், அம்பாறை )

திருக்கோணமலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமுற்று எம்மைப் பிரிந்த -

லெப். மன்னன் (நடேசகுரு உமாகாந் - 749 நாவலர் வீதி, தம்பலகமம், திருகோணமலை.)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4504)

## சிந்தனைக்கு

ஒருவனுக்கு அதிகாரம் கிட்டுவதால், அவன் அறிவு பெருகுவதில்லை, அதை அவனிடம் சொல்வதில் உள்ள சிரமம்தான் பெருகுகிறது.

— டி. விட்டன்

ஈழநாதம்

61, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 04-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் [illegible]

## அர்த்தமுள்ள கோரிக்கை

“மக்கள் பாதுகாப்புத்தேடி உயிரைப்பாதுகாத்துக் கொள்ளக் கூடிய கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் அகதிமுகாம்கள் போன்றவற்றையாவது தாக்குதலின்றித் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்'' இவ்வாறு யாழ் மாவட்ட குருக்கள் ஒன்றியம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட குருக்கள் ஒன்றியம் விடுத்துள்ள இக்கோரிக்கையானது மனித நேயத்தின் அடிப்படையில் எழுந்ததாகும். அதாவது யுத்தத்தினால் நிர்க்கதியாகி போக்கிடமற்ற அப்பாவிப் பொதுமக்களை தாக்காதீர்கள் என்பதே இக்கோரிக்கையாகும்.

யுத்தத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு பொதுவாக ஆலயங்களும், அகதிமுகாம்களுமே தஞ்சம் அளிக்கின்றன. ஆலயங்களிலும், அகதிமுகாம்களிலும் தங்கும் மக்கள் அப்பாவிப் பொதுமக்கள் ஆவர். அவர்கள் போக்கிடம் அற்றவர்கள். அத்தோடு, அகதி முகாம்களும், ஆலயங்களுமே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை ஓரளவிற்குப் பராமரிக்கக் கூடிய நிலையிலும் உள்ளன. இந்நிலையிலேயே குருக்கள் ஒன்றியம் கோயில்களிலும், அகதிமுகாம்களிலும் தஞ்சமடையும் இந்த அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தாதீர்கள் எனச் சிறிலங்கா ஜனாதிபதியிடம் மனிதநேய அடிப்படையில்இதையாவது தவிருங்கள் என்றரீதியில் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால், இதனைச் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் புரிந்துகொண்டுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. அண்மையில் மதவாச்சியில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா போரைப்பற்றியும், அதனால் மக்களடையும் துன்பம் பற்றியும், அழிவைப்பற்றியும் பிரஸ்தாபித்துள்ளார். ''வவுனியாவில் ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் மக்களைக் கண்டு அவர்களின் ஆறாத்துயரங்களை கேட்டேன். பிள்ளைகளை இழந்த தாய்மார்கள் கணவனை இழந்த மனைவிமார்கள், உறவினர்களை இழந்த பொதுமக்கள் என்னிடம் அழுது புலம்பி முறையிட்டார்கள்'' எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சு திரு பிரேமதாசா இதுவரையும்தான் யுத்தத்தின் துன்பத்தை உணராவிட்டாலும் வவுனியாவில் இடம் பெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் பின்னராவது உணர்ந்துள்ளார் என அவரது பேச்சு தெரிவிக்கின்றது.

# லிபியாவின் மீது மேற்கின் பாய்ச்சல்; மூன்றாம் உலக நாடுகளின் இறைமைக்கு சவால்

கடந்த மார்ச் 31 ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையானது லிபியாவுக்கு எதிராக விமான மார்க்கப் பயணம், ஆயுத விநியோகம், ராஜதந்திரஉறவு என்பன போன்றவற்றில் தடைவிதிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது 1988 ஆம் ஆண்டில் பான். எம். விமானம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது தொடர்பாக சந்தேகிக்கப்படும் இரு லிபியப் பிரஜைகள் பற்றியும், 1989 ஆம் ஆண்டில் யு டி ஏ. விமானம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது பற்றிய விசாரணையில் பிரான்சு அதிகாரிகளுடன் ஒத்துழைப்பது பற்றியும், சர்வதேச பயங்கரவாதம் பற்றி பகிரங்கமான கண்டனம் ஒன்றை லிபியா வெளியிடுவது பற்றியும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்பாக திட்டவட்டமான முடிவுகளை லிபிய அரசு அறிவிக்காவிடில் இத்தடைஅமுலுக்குவரும் எனவும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது

ஆனால் 1992ஏப்ரல் 15 வரை லிபியா இது தொடர்பாக எந்த சமிக்ஞைகளையும் காட்டாமையினால் இத்தடை அமுலுக்கு வந்தது.

### தீர்மானம்

ஐ நா. சபையின் இந்தத் தீர்மானமானது அதிபர் கேணல் கடாபி தலைமையிலான லிபிய அரசைத் தனிமைப்படுத்தவும், நெருக்கடிக்கு உள்ளாக்கவும் அமெரிக்காவும் மேற்குலகமும் மேற்கொண்ட ஒரு சதி என்பது தெளிவானது. மீண்டும் ஒரு தடவை மூன்றாம் உலக நாடு ஒன்றின்மீது மேற்கின் நெருக்குதலை ஏற்படுத்தும் கருவியாக ஐ. நா. பாதுகாப்புச் சபை பயன்பட்டுள்ளது.

லொக்கர்பீ குண்டு வெடிப்புத் தொடர்பாக இரண்டு லிபியப் பிரஜைகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள், ஜோடிக்கப்பட்டவை என்று சந்தேகிப்பதற்கு போதுமான தகவல்கள் இப்போது கிடைக்கின்றன. லொக்கர் பீ என்னுமிடத்தில் விமானம் குண்டு வைத்துச் சிதறியதும் ஜோர்ஜ் கபாஷ் தலைமையிலான பாலஸ்தீன விடுதலைக்கான வெகுஜன முன்னணியைச் சேர்ந்த அகமட் ஜிப்றில் என்பவர் சிரிய அரசின் உதவியுடன் இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்றே லிபியாவின்மீது இக் குற்றச்சாட்டு சுமத்தப்படடதுடன், ஒரே இரவிலேயே லிபியாவைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு லிபியா மீது குற்றஞ்சாட்டப்பட்டதானது அரசியல் உள்நோக்கம் உடையது என்று அமெரிக்க புலனாய்வு நிறுவனத்தின் (சி. ஐ. ஏ.) முன்னாள் தலைவர் வின்சென்ட் கனிஸ்ராறிபோ கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. லிபியத் தலைவர் கடாபிமீது ஒட்டுமொத்தமாகக் குற்றஞ்சாட்டுவதற்கு எதிராக தனது கண்டனத்தை வின்சென்ட் கனிஸ்ராறியோ வெளிப்படுத்தினார்.

யு சி மகசீன்சஞ்சிகையில்1990 கோடைப்பருவத்தில் இடம் பெற்ற இச் சம்பவங்கள்பற்றி ஜெவ்ப் ஜேன்ஸ் வெளிப்படுத்துகையில் அகமட் ஜிப்றில்மீது தான் இக்குண்டுவெடிப்புத் தொடர்பான சந்தேகம் முழுவதும் படிந்திருந்தது என்பதுடன் இச்சம்பவத்துடன் சி. ஐ. ஏக்கு இருந்த தொடர்பு பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

மிக அண்மையில் அதாவது 27 ஏப்ரல் 1992-ல் டைம் சஞ்சிகையானது அகமட் ஜிப்றியின் தொடர்பு பற்றி உறுதிப்படுத்தியதுடன் சி ஐ ஏயின் தொடர்பு பற்றி விபரமாக விளக்கியிருந்தது

ஆனால் அகமட் ஜிப்றில் தன் மீது தெரிவிக்கப்பட்ட சந்தேகங்களை திட்டவட்டமாக மறுதலித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது அக்டோபர் 1988-ல் மேற்கு ஜேர்மனியில் ஜோர்ஜ் கபாஸ் குழுவிற்கு ஆதரவாளர்கள் எனக் கூறப்படுபவர்களிடமிருந்து ஜேர்மன் பொலிசார் கைப்பற்றிய சில குண்டுகள் பான்அம் விமானத்தில் வெடித்த குண்டுகளை ஒத்தவையாக காணப்பட்டமைதான் இச் சந்தேகத்திற்கு காரணம் எனவும் தெரியவந்தது இந்த மறுதலையான கருத்துக்களை ஏற்க மறுத்தாலும் கூட லிபியாவின் மீதான அமெரிக்க நெருக்குதலுக்கு அரசியல் உள்நோக்கம் உண்டு என்பதை எவரும் சந்தேகிப்பதைத்தவிர்க்க முடியாது

சர்வதேச ரீதியான சட்டப் பிரமாணங்களின்படி இரண்டு லிபியப்பிரஜைகளையும் அமெரிக்காவில் அல்லது பிரிட்டனில் விசாரணை ஒன்றை எதிர்நோக்குவதற்காக[illegible]யும் கைது செய்யவும் விசாரணைக்கு உட்படுத்தவும் என்று ஏற்பாடுசெய்யப்பட்ட1971-ம் ஆண்டின் மொன்றியேல்உடன்படிக்கைக்கு லிபியாவும் கட்டுப்பட்டுள்ளது.மேற்குலகம்லிபியப் பிரஜைகள் மீது குற்றம் சுமத்தியதும் இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்த லிபிய அரசு மாஜிஸ்திரேட் விசாரணைஒன்றிற்கும் உத்தரவிட்டது.

அமெரிக்காவும் பிரிட்டனும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முறைப்படியாக சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களை சமர்ப்பித்து இருக்க வேண்டும்.

> லிபிய அரசாங்கத்தின் மீது அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் மேற்கொள்ளும் நெருக்கடியானது அது பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறதுஎன்பதற்காக அல்ல. மாறாக மேற்கு நாடுகளுக்கு ஏற்புடையதல்லாத சுதந்திர அரசியல் பொருளாதார கொள்கைகளை லிபியா கடைப்பிடிக்கிறது என்பதுவேயாகும்.
>
> நன்றி: Third world Network Featuers

ஆனால் அமெரிக்காவோ பிரிட்டனோ அவ்வாறு செய்யாமல் சந்தேக நபர்களை தமதுநீதிமன்றத்திற்குஅனுப்பி வைக்கும்படியும் திரிபோலி அரசு இந்நாசகாரச் செயலுடன் சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கப் போவதாகவும் கூறின. இந்த யோசனைகள் லிபிய அரசினால் நிராகரிக்கப்பட்டன.

அமெரிக்க அரசுடன் நாடு கடத்தல் உடன்பாடு எதுவுமில்லாத போதும் கூட பல விட்டுக் கொடுப்புகளினூடாக இந்தச் சர்ச்சையை சமரசமாகத் தீர்த்துவிடவே லிபியா விரும்பியது இதன் ஒரு கட்டமாக சர்வதேச சமூகத்தின் மத்தியத்துவத்தையும் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியையும் கூட லிபியா நாடியது

நடுநிலைமை வகிக்கக்கூடிய மூன்றாம் நாடு ஒன்றின் விசாரணைகள் நடத்தப்படுவதற்காக இரு லிபியர்களையும் ஒப்படைக்கவும் அல்லது அரபுலீக் அமைப்பிடம் ஒப்படைக்கவும் லிபியா விரும்பியது. பிக்கு எதிராக நிலவும் எதிர்ப்பு உணர்வினால் நீதியான நேர்மையான விசாரணை நடைபெறமுடியாது என்பதும் ஒரு காரணம் ஆகும்.

இந்தவிதமாக எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போன நிலையில்தான் லிபியா சர்வதேச நீதிமன்றத்தின்உதவியை நாடி மொன்றியேல்உடன்பாட்டின்படி இத்தகைய குற்றவாளிகள் எந்த நாட்டில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதற்கான விளக்கத்தைக் கோரியது.

மேலும் அமெரிக்காவும் அதன் நட்புநாடுகளும் இவ் விவகாரத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு எடுத்துச் சென்றதுடன் சட்டபூர்வமாக இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முனைந்த லிபியாவின் முயற்சிகளையும் குழப்பியடித்தன அமெரிக்காவும் அதன் நட்பு சக்திகளும் ஐக்கிய நாடுகளின் சபையில் எடுத்த முயற்சிகளுக்கு இடைக்கால தடை விதிக்கும்படியும் லிபியா கோரியது.

இருதரப்பு விவாதங்களுக்கும் செவி மடுத்த சர்வதேச நீதிமன்றம் 1992 ஏப்ரல் 14 ம் திகதிவரை- அதாவது லிபியாவிற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைவதற்கு ஒரு நாள் முன்பு வரை- தீர்ப்பு வழங்கப்படுவதை ஒத்தி வைத்தது. ஏப்ரல் 14 இல பதினொன்றுக்கு ஐந்து என்ற விகிதத்தில் லிபியாவின் விண்ணப்பத்தை நிராகரிப்பதாக சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வெளியிட்டது.

லிபியாவின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதாக சர்வதேச நீதிமன்றம் தெரிவித்த காரணங்கள் போலியானவை என்றபோதிலும்கூட நீதிமன்றத் தீர்ப்பு லிபியா கோரிய தற்காலத்தடையுத்தரவுமீதானது மட்டுமே என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சர்வதேசநீதிமன்றம்மொன்றியேல் உடன் படிக்கையின் படி குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு லிபியர்களும் எந்த நாட்டில் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு இதுவரை தீர்ப்பு அளிக்கவில்லை

இந்தநிலையிலும் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவருவதற்குமுன்பாகவே அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை விதித்த தடையுத்தரவுகளை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டன உலக அரங்கில் தமக்கு தற்பொழுது இருக்கும் அரசியல்,பொருளாதாரத்திற்கு எதிராக மிகுந்த தயக்கம் காட்டியிருப்பதுடன் வாக்களிப்பில் கலந்து கொள்ளவும் மறுத்துள்ளன.

இது அமெரிக்காவும் அதன் நட்பு சக்திகளும் உலகை தாம் நினைத்த மாதிரியே நடத்திச் செல்ல எப்படிக்காரியங்களைத் திரிபு படுத்துகின்றன என்பதை எடுத்துக்காட்டும்மேற்கின் அடிப்படையான ஒரே கோரிக்கை இரண்டு லிபியர்களையும் அமெரிக்காவில் அல்லது பிரிட்டனில் விசாரணைக்காக லிபியா கையளிக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால் 748 ஆவது தீர்மானம் அதைமட்டும் உள்ளடக்கியதல்ல. பிரான்சு அதிகாரிகளுடன் ஒத்துழைப்பது பற்றியும் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான லிபியாவின் உறுதியான செயற்பாடு பற்றியும் அது கோரியது.

இதன்மூலம் இது இரண்டு லிபியர்களை நாடு கடத்தும் விவகாரம் என்பது லிபிய அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவும் பயங்கரவாதஅரசு எனக்காட்டவும் தான் மேற்கு விரும்புகின்றது என்பது தெளிவாகிறது.

இவை எல்லாவற்றிலிருந்தும். மேற்கும் அதன் நட்பு சக்திகளும் விரும்புவதுசந்தேக நபர்கள் விசாரிக்கப்பட வேண்டும். நீதி வழங்கப்பட வேண்டும் என்பவற்றையல்ல. பதிலுக்கு லிபியாவின் அரசைக் கவிழ்க்கவும் அதிபர் கடாபியைப் பதவி இறக்கவும் தான் என்பது தெளிவாகிறது. அதாவது உண்மையான இலக்கு பயங்கரவாதத்தை எதிர்ப்பது அல்ல, கடாபியை வீழ்த்துவதேயாகும்.

கடாபியை வீழ்த்துவதற்கு மேற்குலகம் முற்படுவதற்கு காரணம் அவர் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறார் என்பதை விடவும், அமெரிக்காவிற்கு ஏற்கமுடியாத அரசியல் மற்றும் பொருளாதாரகொள்கைகளை அமுல்படுத்தும் கொள்கையை கொண்டிருப்பதேயாகும்.

வளைகுடாப் போரின் போது ஐ நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப நட

ஆனால், இதனைச் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் புரிந்து கொண்டுள்ளார் என்பதில் சந்தேகமில்லை. அண்மையில் மதவாச்சியில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா போரைப்பற்றியும், அதனால் மக்கள்படும் துன்பம் பற்றியும், அழிவைப்பற்றியும் பிரஸ்தாபித்துள்ளார். ''வவுனியாவில் ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் மக்களைக் கண்டு அவர்களின் ஆறாத்துயரங்களை கேட்டேன். பிள்ளைகளை இழந்த தாய்மார்கள் கணவனை இழந்த மனைவிமார்கள், உறவினர்களை இழந்த பொதுமக்கள் என்னிடம் அழுது புலம்பி முறையிட்டார்கள்'' எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சு திரு பிரேமதாசா இதுவரையும்தான் யுத்தத்தின் துன்பத்தை உணராவிட்டாலும் வவுனியாவில் இடம் பெற்ற ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் பின்னராவது உணர்ந்துள்ளார் என அவரது பேச்சு தெரிவிக்கின்றது.

ஆனால், ஒருபுறம் சிறிலங்கா ஜனாதிபதி பேசிக்கொண்டிருக்கும்போது மறுபுறத்தில் வடக்கில் இரு முனைகளில் கடும் சண்டை நடைபெற்ற வண்ணமுள்ளது. ஆயிரக் கணக்கான மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு வெறும் கையோடு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள் அகதிமுகாம்கள் என்பவற்றிலும் தங்குவதற்கு மக்கள் அஞ்சுகின்றார்கள்.

படுகொலைகளுக்கும், ஆட்கடத்தலுக்கும் பெயர் பெற்ற சிறிலங்கா இராணுவம் குறித்து மக்கள் அச்சப்படுவது நியாயமே. ஏனெனில் அகதிமுகாம்களின் மீது சிறிலங்கா இராணுவம் குண்டுகளை வீசியுள்ளது. கோவில்களுக்குள் புகுந்து படுகொலைகளைப் புரிந்துள்ளது. ஆனால், சிறிலங்கா அரசாங்கம் கண்டுகொள்வதாக இல்லை.

வவுனியா, ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் பின்னராவது இப்படுகொலை நடவடிக்கைகளுக்குச் சிறிலங்கா ஜனாதிபதி ஒரு வரம்பு போட்டதாக இல்லை. மணலாற்றுப் பகுதியில் தற்பொழுதும் சிறிலங்கா விமானப்படை அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதலையும், பீரங்கித் தாக்குதலையும் நடத்திக் கொண்டிருக்கிறது. மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இந்நிலையில் யாழ் மாவட்ட குருக்கள் ஒன்றியம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரினால் எந்தளவிற்கு மக்கள் நன்மை அடைவார்கள், பாதுகாக்கப்படுவார்கள் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் நித்திரையாக இருப்பவனை எழுப்பலாம். நித்திரைபோல் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. இன அழிப்பு ஒன்றையே பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படும் சிறிலங்கா இராணுவத்திற்கு, ஆலயங்கள், அகதிமுகாம்கள் என்பனவே சுலபமான இலக்குகள். குறைந்த செலவீட்டில் அனேக தமிழரை அழித்துவிடக்கூடிய இடங்களாகும். இதனால், தமிழ்மக்களும் பொது ஸ்தாபனங்களும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமது ஆட்சேபங்களையும், கண்டனங்களையும் தெரிவிப்பது நிறுத்திவிடுதலும் தவறாகும். ஏனெனில் தமிழ் மக்கள் விரோதப்போக்கைச் சிறிலங்கா அரசாங்கம நீண்ட காலமாக எவ்வாறு கடைப்பிடித்து வருகின்றது என்பதை உலகம் விளங்கிக்கொள்ள இவையே சான்றுகளாகும்.

---

தடவை மூன்றாம் உலக நாடு ஒன்றின்மீது மேற்கின் நெருக்குதலை ஏற்படுத்தும் கருவியாக ஐ. நா. பாதுகாப்புச் சபை பயன்பட்டுள்ளது.

லொக்கர்பீ குண்டு வெடிப்புத் தொடர்பாக இரண்டு லிபியப் பிரஜைகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள், ஜோடிக்கப்பட்டவை என்று சந்தேகிப்பதற்கு போதுமான தகவல்கள் இப்போது கிடைக்கின்றன. லொக்கர் பீ என்னுமிடத்தில் விமானம் குண்டு வைத்துச் சிதறியதும் ஜோர்ஜ் கபால் தலைமையிலான பாலஸ்தீன விடுதலைக்கான வெகுஜன முன்னணியைச் சேர்ந்த அமட் ஜிறிப் என்பவர் சிரிய அரசின் உதவியுடன் இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்றே அமெரிக்க அதிகாரிகள் முதலில் சந்தேகித்தனர்.

இந்தச் சந்தேகமானது வளைகுடாப்போர் ஆரம்பிக்கும் வரை நீடித்ததுஎன்பதுடன் இந்த இடைப்பட்ட காலப் பகுதியில் லிபியா இச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்பது ஆலோசனைக்குக்கூட எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1991 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில திடீரென லிபியா குழுவிற்கு ஆதரவாளர்கள் எனக் கூறப்படுபவர்களிடமிருந்து ஜேர்மன் பொலிசார் கைப்பற்றிய சில குண்டுகள் பான்கம் விமானத்தில் வெடித்த குண்டுகளை ஒத்தவையாக காணப்பட்டமைதான் இச் சந்தேகத்திற்கு காரணம் எனவும் தெரியவந்தது இந்த மறுதலையான கருத்துக்களை ஏற்க மறுத்தாலும் கூட லிபியாவின் மீதான அமெரிக்க நெருக்குதலுக்கு அரசியல் உள் நோக்கம் உண்டு என்பதை எவரும் சந்தேகிப்பதைத்தவிர்க்க முடியாது

சர்வதேச ரீதியான சட்டப் பிரமாணங்களின்படி இரண்டு லிபியப்பிரசைகளையும் அமெரிக்காவில் அல்லது பிரிட்டனில் விசாரணை ஒன்றை எதிர்நோக்குவதற்காகக்கையளிக்கும்படி அமெரிக்கா கோரமுடியாது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் என்பவற்றுடன் லிபியாவிற்கு குற்றச் சந்தேக நபர்களை நாடுகடத்தும் உடன்படிக்கை எதுவும் கிடையாது அத்தகைய உடன்படிக்கை இல்லாத நிலையில் இத்தகைய கோரிக்கை எழுப்பப்பட முடியாது.

எனினும் சிவில் விமானப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் எந்த நபரை ... பிரிட்டனிடமும் கோரினர். இந்த யோசனைகள் லிபிய அரசினால் நிராகரிக்கப்பட்டன.

அமெரிக்க அரசுடன் நாடு கடத்தல் உடன்பாடு எதுவுமில்லாத போதும் கூட பல விட்டுக் கொடுப்புகளினூடாக இந்தச் சர்ச்சையை சமரசமாகத் தீர்த்துவிடவே லிபியா விரும்பியது இதன் ஒரு கட்டமாக சர்வதேச சமூகத்தின் மத்தியத்துவத்தையும் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியையும கூட லிபியா நாடியது

நடுநிலைமை வகிக்கக்கூடிய மூன்றாம் நாடு ஒன்றின் விசாரணைகள் நடத்தப்படுவதற்காக இரு லிபியர்களையும் ஒப்படைக்கவும் அல்லது அரபுலீக் அமைப்பிடம் ஒப்படைக்கவும் லிபியா விரும்பியது.

ஆனால் இந்த ஒவ்வொரு யோசனைகளையும் கண்மூடித்தனமாக நிராகரித்த அமெரிக்கா மீண்டும் மீண்டும் இரண்டு லிபியர்களும் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றே வலியுறுத்தியது. இதனை ஏற்றுக்கொள்ள லிபியா தொடர்ந்தும் மறுத்தமைக்கு சட்டபூர்வமான காரணங்களுடன் இவ் இரு நாடுகளிலும் லிபியாவிற்கு எதிராக குறிப்பாக, சேணல் கடா ... றத் தீர்ப்பு லிபியா கோரிய தற்காலத்தடையுத்தரவும் மீதானது மட்டுமே என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சர்வதேசநீதிமன்றம்மொன்றியேல் உடன் படிக்கையின் படி குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு லிபியர்களும் எந்த நாட்டில் விசாரிக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு இதுவரை தீர்ப்பு அளிக்கவில்லை

இந்தநிலையிலும் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவருவதற்குமுன்பாகவே அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை விதித்த தடையுத்தரவுகளை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டன உலக அரங்கில் தமக்கு தற்பொழுது இருக்கும் அரசியல், பொருளாதார இராணுவவலிமைகளுக்கு மத்தியிலும கூட லிபியாவுக்கு தடைவிதிக்கும் ஐ. நாவின் 748 ஆவது தீர்மானத்திற்கு ஆதரவைக் கூட்டுச் சேர்ப்பதில் அவை சிரமப்படவேண்டிய நிலையே காணப்படுகின்றது

மூன்றாம் உலக நாடுகளிலிருந்து பாதுகாப்புச் சபையில் இடம் பெற்றுள்ள இந்தியா, சீனா, சிம்பாப்வே போன்ற நாடுகள் இந்தத் தீர்மானத்தி... யைப் பதவி இறக்கவும் தான் என்பது தெளிவாகிறது. அதாவது உண்மையான இலக்கு பயங்கரவாதத்தை எதிர்ப்பது அல்ல, கடாபியை வீழ்த்துவதேயாகும்.

கடாபியை வீழ்த்துவதற்கு மேற்குலகம் முற்படுவதற்கு காரணம் அவர் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறார் என்பதை விடவும், அமெரிக்காவிற்கு ஏற்கமுடியாத அரசியல் மற்றும் பொருளாதாரகொள்கைகளை அமுல்படுத்தும் கொள்கையை கொண்டிருப்பதேயாகும்.

வளைகுடாப் போரின் போது ஐ நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக் கொண்டு அமெரிக்காவும் நேச நாடுகளும் போர் ஒன்றை நடத்தியதைப் போல லிபியாவின் மீதும் எதிர்காலத்தில் தாக்குதல் நடத்தப்படலாம்.

ஆனால் அப்படிநேருமாயின் அது லிபியாவின் இறைமையை மட்டுமன்றிஅனைத்து மூன்றாம் மண்டல நாடுகளின் இறைமையையும் கேள்விக்கு உரியதாக்கும்.

---

# அகதிகளை நாடுதிரும்ப நிர்ப்பந்திக்கக் கூடாது

## தி. மு. க மாநாட்டில் தீர்மானம்

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதி மக்களைக் கட்டாயமாக நாடு திரும்புமாறு நிர்ப்பந்திக்கக் கூடாது என்றும், இலங்கையில் சுமுகச் சூழ்நிலை ஏற்படும் வரை அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு செய்திட வேண்டும் என்றும் நேற்றுச் சென்னையில் நடைபெற்ற தி. மு. க பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தடாச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறதுஎன்றும், இதனை உடனடியாக மீளப்பெறவேண்டும்என்றும் ஒரு தீர்மானம் கூறுகிறது,

வர்த்தக ரீதியாக

# சீனாவிற்கு முக்கிய இடம் அமெரி. அதிபர் புஷ் முடிவு

(வாஷிங்டன்)

மனித உரிமைகள் விவகாரத்தில் சீனா நடந்துகொள்ளும் முறை சரியல்ல என்ற புகார்கள் அமெரிக்காவில் எழுந்துள்ள போதிலும் அந்நாட்டிற்கு வர்த்தக ரீதியாக மிகவும் வேண்டப்பட்ட நாடு என்ற அந்தஸ்தை மீண்டும் வழங்க அதிபர் ஜோர்ஜ் புஷ் முடிவு செய்துள்ளார்.

இதேவேளை வாஷிங்டனில் வெள்ளை மாளிகையின் அதிகாரியான பிட்சுவாட்டல் கூறுகையில் சீனாவுடன் மனித உரிமைகள் பற்றி நடத்தும் பேச்சுகளில் அவ்வளவாக முன்னேற்றம் காணப்படவில்லை என்று தெரிவித்தார்.

# திருக்குறள் மாநாடு

உலகத் திருக்குறள் மாநாடு 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 7 ஆம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் ஆய்வுக் கருப்பொருள் 'உலக மக்கள் ஒன்றுபட்டு இன்புற்று வாழ்வதற்கு அறிவியல் அடிப்படையில் தமிழ்மறை காட்டும்வழி' என்பதாகும்

திருக்குறள், திருவள்ளுவர் தொடர்பாக ஆய்வரங்குகளும் அப்போது நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விபத்தில் சிக்குண்டார்

கேரள மாநிலத்தின் முதலமைச்சரும், ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான கே. கருணாகரன் பயணம் செய்த கார் நேற்று முன்தினம் காலை விபத்தில் சிக்கியது. திருவனந்தபுரத்திற்கு அருகே கார் சாலையை விட்டு விலகியதால் விபத்து சம்பவித்தது இவ் விபத்தில் தலையில் காயமடைந்த கருணாகரன் திருவனந்தபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்துக்களுக்கும் - பௌத்தர்களுக்கும்

# புத்தகாயா மகாபோதி குறித்துச் சச்சரவு

(டில்லி)

பீகாரில் புத்தகாயாவில் அமைந்துள்ள மகாபோதி குறித்து இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையில் சச்சரவு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்துப் பிராமணர்கள் புனித மகாபோதி அமைந்திருக்கும் இடத்தின் மீது நீண்டகாலமாக உரிமை பாராட்டி வருகிறார்கள்.

இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கப் பீகார் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. புத்தர் ஞானம் பெற்ற அந்த இடத்தைச்சுற்றி பீகார் மாநில அரசு பொலிஸ் பாதுகாப்பு வழங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மகாராஸ்டிரா பிக்குகள் சங்கமும், அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை மக்கள் முன்னணி காயா மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கொன்றில் மகாபோதி வளாகத்தில் உள்ள கேணியில் இந்து விக்கிரகங்கள் தீர்த்தமாடுவதைத் தடை செய்தது.

பீகார் மாநில ஜனதா தளம் மற்றும் முதலமைச்சர் பிரசாத் யாதாவ் ஆதரவு பௌத்தர்கள் பக்கம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா மகாபோதி சங்கத்தினரும் இது குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர்.

மகாபோதி அமைந்திருக்கும் இந்தப் பிரச்சினைக்குரிய இடத்தை சிறிலங்கா பௌத்த துறவியான அநகாரிக தர்மபாலா மகாபோதி சங்கத்துக்காக வாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் விருப்பம்

[டில்லி]

இஸ்ரேலுடன் ராஜீப உறவைச் சமீபத்தில் ஏற்படுத்தியுள்ள இந்தியா இஸ்ரேலில் பாதுகாப்புத் தொழில் நுட்பத்தைப் பெறவும் ஏவுகணை எதிர்த் தாக்குதலைக் கூட்டாக உருவாக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளது.

இத் தகவலை இந்தியாவின் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

ஈழநாதம்

பெருந்தோட்ட நிர்வாகம்

# தனியாரிடம் கையளிப்பு பௌத்த பீடங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட நிர்வாகம் தனியாரிடம் ஒப்படைக்கப் படுவதற்கு மல்வத்த, அஸ்கிரிய பௌத்தமத பீடங்களைச் சேர்ந்த முக்கியமான மூன்று சிக்காயாக்களின் மகா நாயக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மல்வத்த பீடத்தை சேர்ந்த கம்புக்வெல சிறிவிபஸ்ஸி தேரரும், பலிப்பான சிறி சந்தானந்த தேரரும் கையெழுத்திட்டு தயாரித்தமகஜரொன்று,தற்போது ராமான்ய நிக்காயாவின் தலைவர் வெட்டவெல சிறிபஞ்ச நாகர தேரோ மற்றும் அமரபுர நிக்காயாவின் மடிகே பஞ்ஞ சிகமாநாயக தேரோ ஆகியோரின் கையொப்பங்களுக்காக அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது 5,45,000 ஏக்கர் பெருந் தோட்டங்கள் இருபத்திரண்டு தனியார் கம்பனிகளிடம் பகிர்ந்தளிக்கப்படுவது கண்டிய குடியானவர்களைப் பெரிதும் பாதிக்கும். அதனால் கண்டிய குடியானவர்களின் நிலமின்மைப் பிரச்சினை தீர்க்கப் படும்வரை பெருந்தோட்ட நிர்வாகங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படலாகாது.

அத்துடன் இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றுள்ள நாற்பத்திரண்டாயிரம் மலையக தமிழர்களையும் நாடுகடத்துவது பற்றி இந்திய அரசுடன் சிறிலங்கா அரசு பேசவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## தோட்ட நிர்வாகம் தனியார் வசம்

(கொழும்பு)

பெருந்தோட்டங்களை தனியார் நிறுவனங்கள் நிர்வகிக்கும் திட்டம் அடுத்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மூன்று மாதங்களுக்கு மேல் அரசு தனியார் நிறுவனங்களுடன்நடத்திய பேச்சுவார்த்தைகளின் பிறகு, 22 தேயிலைத் தோட்டங்களின் முகாமைத்துவம் தனியார் நிறுவனங்களுக்கு அடுத்த வாரம் முதல் முறையாகக் கை மாறுகிறது.

## மாகாண சபை தேர்தல்; சுதந்திரக்கட்சி தயாராகிறது

(கொழும்பு)

வருட இறுதியில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில போட்டியிட வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகுதியான வேட்பாளர்களைத் தெரிவு செய்யவும், தேர்தல் குறித்துத் தந்திரோபாயங்களை வகுக்கவும் கடந்த வியாழனன்று கூடிய கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் கட்சியின்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா, கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா ஆகியோர் இடம் பெறுகிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக முன்னணி அமைத்துத் தேர்தலைச் சந்திப்பது குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் குழுவுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

## விண்ணப்பங்கள்

யாழ்பல்கலைக்கழக முதலாம் வருட பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் யாவும் பல்கலைக்கழக பரீட்சைக்கிளையினால் வழங்கப் பட்டு வருகிறது.

இதற்கான இறுதி முடிவுத் திகதி இம்மாதம் 30ஆம் திகதியாகும்.

இதேவேளை முதலாம் வருட வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை செப்டம்பர் மாத இறுதியளவில் நடைபெறுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

துர்க்கை அம்மன் ஆலயம் மீது

## குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு சன்மார்க்க சபை கண்டனம்

துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்திய சிறிலங்கா அரசின் செயல் மிருகத்தனமானது என்று குரும்பசிட்டி சன்மார்க்க சபை தெரிவித்துள்ள கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சபை யாழ். அரசாங்க அதிபருக்கு ஊடாக இந்து கலாசார இராஜாங்க அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் மாவிட்டபுரம் காமம் வடக்கு மக்களின் புகலிடமாகவும், சாந்தி பீடமாகவும் மிளிர்ந்திருந்தது இன்று அதுவும் இதயத்தைக் கசக்கிப் பிழியும் காட்சியாகி விட்டது. தொடர்ந்தும் துயர் தரும் நிலையமாகி விட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. மானிப்பாய்க்கு இடமாற்றம்

## தங்கக் கடத்தல் பிடிபட்டது

(கொழும்பு)

மாலைதீவு விமான சேவையில் கடந்த சனியன்று இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய வெளிநாட்டுப் பிரசை ஒருவரிடமிருந்து 50 தங்கக் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

வீடியோ பற்றறிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தத் தங்கக் கட்டிகளின் பெறுமதி 32 லட்சம் ரூபாவாகும்.

சுங்க அதிகாரிகளான பி.கந்தசாமியும் ஏ. ஏ. சுப்பையாவும் விசாரணை மேற்கொண்டனர். சுங்கப் பிரதிப் பணிப்பாளர் எம். ஜி. எஸ். தம்மவன்சா கடத்தலில் ஈடுபட்ட வெளிநாட்டுப் பிரசைக்கு 96 லட்சம் ரூபா அபராதம் விதித்தார். அபராதப்பணத்தைச் செலுத்தும் வரை அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# மேலதிகாரிகள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை

## தொழிற்சங்கம் கோருகிறது

[கொழும்பு]

தவறிழைக்கும் அரச ஊழியர் மீது மேலதிகாரிகள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிறார்கள். அதேபோல் மேலதிகாரிகள் தவறிழைக்கும்போது அவர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொழிற் சங்க தேசிய மையம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றிப் புரிந்து கொள்ளாமலும், குற்றப் பத்திரிகையைச் சரியாகப் படிக்காமலும், பக்கச் சார்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் ஊழியர்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகின்றார்கள்.

தவறாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் மேலதிகாரிகளை விசாரித்து நடவடிக்கை எடுக்க அரச சேவை ஆணைக்குழு வழிவகை செய்ய வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## 1000 தொண்டராசிரியருக்கு நிரந்தர நியமனம்

[கொழும்பு]

வடபகுதியில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்என்று கல்விச்சேவைகள் சபையின் செயலாளர் ஏ எஸ். வீரரட்ண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகியமாவட்டங்களில் இருந்து இவ் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். நாடு முழுவதும் இவ்வாண்டு சுமார் எண்ணாயிரம் தொண்டர் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளல் என்ற திட்டத்திற்கமையவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 6000 தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். மீதி 2000 ஆசிரிய நியமனங்களின் போது வடபகுதியில் இருந்து 1000 தொண்டர் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். 1989 ஆண்டு குழப்பங்களின் போது முழுநேரத் தொண்டர் ஆசிரியர்களாக கடமைபுரிந்தவர்களுக்கு மேற்படி தெரிவின்போது முன்னுரிமை வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணதொகை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவுப் பொருள்களின் பெறுமதி அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

மேற்படி உணவுப் பொருள்களிற்கான பெறுமதி அதிகரிக்கப்பட்ட அதேவேளை பொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி ஒரு அங்கத்தவருக்குரிய தொகையான 75 ரூபா 60 சதம் 84 ரூபாவாகவும், இரண்டு அங்கத்தவருக்குரிய தொகை 138 ரூபா 60 சதம் 154 ரூபாவாகவும், மூன்று அங்கத்தவருக்குரிய தொகை 189 ரூபா 210 ரூபாவாகவும், நான்கு அங்கத்தவருக்குரிய தொகை 226 ரூபா 80 சதம் 252 ரூபாவாகவும், ஐந்தும் ஐந்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்குமான தொகையான 283 ரூபா 50 சதம் 315 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வழங்கப்படவுள்ள பொருள்களில் அரிசியின் விலை ஒரு ரூபாய் எண்பது சதத்தினாலும், மாவின் விலை முப்பத்தி ஐந்து சதத்தினலும், சீனியின் விலை ஒரு ரூபாய் பத்துச் சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. [22]

## வலி- வடக்கில் வீடுகள் தகர்ப்பு

(தெல்லிப்பழை)

வலி-வடக்கில் தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தெல்லிப்பழையை அண்டிய பகுதிகளில் பல பொதுமக்களின் வீடுகளை குண்டு வைத்துத் தகர்த்து வருகின்றனர்.

கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இவ்வாறு ஐந்திற்கும் மேற்பட்ட வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதன்போது எழும் குண்டுச் சத்தம் பலமைல் தூரங்களுக்குக் கேட்டன. (ச)

## மீண்டும் கருணாநிதி

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மீண்டும் மு கருணாநிதி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்றுச் சென்னையில் நடைபெற்ற தி. மு. க.வின் பொதுக்கூட்டத்தில் மு. கருணாநிதி ஆறாவது முறையாகத் தொடர்ந்து இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

க. அன்பழகன் பொதுச் செயலாளராகவும், சாதிக் பாட்ஷா பொருளாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நாஞ்சில் மனோகரன் துணைப் பொதுச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ராஜீவ் நினைவுச் சின்னம்

# சிறிபெரும் புதூரில் அமைக்க விசுவஇந்து பரிஷத் எதிர்ப்பு

(சென்னை)

ராஜீவ்காந்திக்கு சிறிபெரும் புதூர் கோயில் நிலத்தில் நினைவுச்சின்னம் எழுப்புவதற்கு விசுவ இந்து பரிஷத் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து விசுவ இந்து பரிஷத்தின் மத்திய செயலாளரான ஜஸ்வந்த்ராய தெரிவித்திருப்பதாவது ஆதிகேசவ பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான மேற்படி நிலத்தை தமிழ் நாடு அரசு சுவீகரித்துள்ளது. இதனை எதிர்த்து கோயில் நிர்வாகம் சென்னை மேல் நீதி மன்றில் ... டும் திட்டத்தை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தாமதப் படுத்தி நிதானமாக செயற்படுத்தி வருகிறார் இதைப் பாராட்டுகிறோம்.

ராஜீவ் கொல்லப்பட்ட இடம்ராமானுஜர் பிறந்தஇடமாகும் எனவே இந்து நினைவுச்சின்னம்கூட்ட அரசு தீட்டியுள்ள திட்டத்தை மாற்றி அமைக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையேல் நாடு தர்ம சங்கடமான நிலைக்கு தள்ளப் பட்டுவிடும் எனவும் எச்சரித்துள்ளது.

தீவக நலன் காக்கும் கழகம்

## மரணச் சடங்கிற்கு பணஉதவி வழங்கும்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால சிறிலங்கா இரா ... மக்களின் மரணச்சடங்கிற்கு வழங்கப்பட்டுவந்த உதவிச் ...

துர்க்கை அம்மன் ஆலயம் மீது

# குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு சன்மார்க்க சபை கண்டனம்

துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்திய சிறிலங்கா அரசின் செயல் மிருகத்தனமானது என்று குரும்பசிட்டி சன்மார்க்க சபை தெரிவித்துள்ள கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சபை யாழ். அரசாங்க அதிபருக்கு ஊடாக இந்து கலாசார இராஜாங்க அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேசுவரர் கோவில் என்பவற்றில் வழிபாட்டுரிமைகள் மறுக்கப்பட்ட பின்னர் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானமொன்றே வலிகாமம் வடக்கு மக்களின் புகலிடமாகவும், சாந்தி பீடமாகவும் மிளிர்ந்திருந்தது இன்று அதுவும் இதயத்தைக் கசக்கிப் பிழியும் காட்சியாகி விட்டது. தொடர்ந்தும் துயர் தரும் நிலையமாகி விட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டம்

தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவையின் கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் யாழ் கல்வித்திணைக்கள அதிகாரிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்கின்றனர் இக்கூட்டத்தில் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

# தெல்லிப்பழை ப.நோ.கூ.ச. மானிப்பாய்க்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் முப்படைகளினதும் கடும் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புக்கருதி தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மானிப்பாய்க்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் தெல்லிப்பளையில் இயங்கிவந்த மேற்படி சங்கத்தின் கிராமிய வங்கி மொத்த விற்பனை நிலையம், பிரதம காரியாலயம் ஆகியன மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் இயங்கும் என இச்சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ச)

## சந்திக்குமாறு வேண்டுகோள்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் அவ்வக்கோட்டத்தில் அமைந்த பாடசாலை அதிபர்களை இன்று வியாழன் மாலை 2 மணிக்குத் தவறாது சந்திக்குமாறு யாழ். பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

யாழ்பல்கலைக்கழக முதலாம் வருட பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் யாவும் பல்கலைக்கழக பரீட்சைக்கிளையினால் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான இறுதி முடிவுத் திகதி இம்மாதம் 30ஆம் திகதி யாகும்.

இதேவேளை முதலாம் வருட வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை செப்டம்பர் மாத இறுதியளவில் நடைபெறுமென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

## பண்ணிசைக்கு தனித்துறை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் தமிழிசையான பண்ணிசையைத் தனித்துறையாக அங்கீகரிக்கும் படி இந்து சமயப் பேரவை யாழ்பல்கலைக்கழகத் துணை வேந்தரைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது

மேலும், கர்நாடக சங்கீதத்தில் பட்டம் பெறுபவர்கள் பண்ணிசையிலும் தேர்ச்சி உள்ளவர்களாக இருக்கக் கூடிய வகையில் பாடத்திட்டத்தில் ஏற்பாடு செய்யும் படியும் அத் தீர்மானம் கோருகின்றது.

## கைதானோர் நிரபராதிகள்

ஊவா மாகாணத்தில் கைது செய்யப்பட்டவர்களில் ஆறு தமிழர்கள் நிரபராதிகள் எனக்கூறி விசேட பொலிஸ் பணியகம் விடுதலை செய்துள்ளது.. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் பதுளையில் முகாமிட்டிருக்கும் விசேட பொலிஸ் பணியகத்தினரால் விசாரணை செய்யப்பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கருணாநிதி

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மீண்டும் மு கருணாநிதி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்றுச் சென்னையில் நடைபெற்ற தி. மு. க.வின் பொதுக்கூட்டத்தில் மு. கருணாநிதி ஆறாவது முறையாகத் தொடர்ந்து இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

க. அன்பழகன் பொதுச் செயலாளராகவும், சாதிக் பாட்ஷா பொருளாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நாஞ்சில் மனோகரன் துணைப் பொதுச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது

(கொழும்பு)

ஹுண்ணம பொலிஸ் சிற்றுண்டிச்சாலை ஊழியர் எஸ். பி. விமலசிறி (வயது 33) கொலை தொடர்பாக விசாரித்து வரும் பொலிஸ் அதே பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி புத்தசிறி சில்வாவைக் கைது செய்துள்ளது.

ஹுண்ணம -வீதியோரத்தில் அடி காயங்களுடன் விழுந்து கிடக்கக் காணப்பட்ட விமலசிறிசிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் காலமானார்.

## மெய்வல்லுனர் போட்டி

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்டத்திலான மெய்வல்லுனர் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறும் என யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளும், யாழ் இந்துக்கல்லூரியில் ஆண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகளும் நடைபெறும் என தெரிய வருகின்றது. (பா

## பத்திரிகையாளர்

ஐலண்ட் தினசரியை அஜித் சமரநாயக்கா கூறினார்.

அரசுக்குச் சொந்தமான ஏரிக்கரைப் பத்திரிகைகள் மற்றும் வானொலி போன்ற தொடர்புசாதனங்களிலிருந்து எவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நேற்றுக் கொழும்பில் கூடிய பத்திரிகையாளர் அனைவரும் மக்கள் நாட்டின் பிரச்சினைகளை அறியவிரும்புகிறார்கள் என உறுதியாகத் தெரிவித்தனர்.

# விசுவஇந்து பரிஷத் எதிர்ப்பு

(சென்னை)

ராஜீவ்காந்திக்கு சிறிபெரும்புதூர் கோயில் நிலத்தில் நினைவுச்சின்னம் எழுப்புவதற்கு விசுவ இந்து பரிஷத் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து விசுவ இந்து பரிஷத்தின் மத்திய செயலாளரான ஜஸ்வந்த்ராய தெரிவித்திருப்பதாவது ஆதிகேசவ பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான மேற்படி நிலத்தை தமிழ் நாடு அரசு சுவீகரித்துள்ளது. இதனை எதிர்த்து கோயில் நிர்வாகம் சென்னை மேல் நீதி மன்றில் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இந்நிலையில் ராஜீவ் நினைவு இல்ல அடிக்கல் நாட்டும் திட்டத்தை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தாமதப்படுத்தி நிதானமாக செயற்படுத்தி வருகிறார் இதைப் பாராட்டுகிறோம்.

ராஜீவ் கொல்லப்பட்ட இடம்ராமானுஜர் பிறந்த இடமாகும் எனவே இந்த நினைவுச்சின்னம்கூட்ட அரசு தீட்டியுள்ள திட்டத்தை மாற்றி அமைக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையேல் நாடு தர்ம சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டு விடும் எனவும் எச்சரித்துள்ளது.

## இறுதிப் போட்டி

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தின் முதலாம் வருட நிறைவையொட்டி தமிழீழத்திலுள்ள கழகங்களுக்கிடையே நடாத்தப்படும் ஏழுபேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய இறுதிப்போட்டியாக மாலை 3.30 க்கு திருமலை நட்சத்திரங்களை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதுகின்றது. அதனைத் தொடர்ந்து இறுதி ஆட்டமாக இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. மேற்படி சுற்றுப்போட்டிகள் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமானது இதில் 38 கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## தீவக நலன் காக்கும் கழகம்

# மரணச் சடங்கிற்கு பணஉதவி வழங்கும்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தீவகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களின் மரணச்சடங்கிற்கு உதவிப்பணம் வழங்க இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் முன்வந்துள்ளது.

இதுவரை காலமும் தீவகப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த மக்களின் மரணச்சடங்கிற்கு வழங்கப்பட்டுவந்த உதவிக்கொடுப்பனவை கடந்த மாசி மாதத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நிறுத்திக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து மரணச்சடங்கிற்கு கடந்த மூகலம் திகதி முதல் தலா 1500 ரூபாவை வழங்குவதென கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

# விடுதலைப் புலிகள் பற்றிய தொலைக்காட்சிப் படம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் பற்றிய ரீ. வி. படம் ஒன்று தயாரிக்க வான்கார்ட் ரெலிவிஷன்நியூஸ் (Vanguard Television News) என்ற ஸ்தாபனத்தைச்சேர்ந்த படப்பிடிப்பாளர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இந்தக் குழுவில் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களான ரொனி பேர்ட்லி, ஜி. இங்கிலிஷ், எகிப்து நாட்டைச் சேர்ந்த சி. பாட்ரூப் ஆகியோர் இடம்பெறுகிறார்கள்.

# வெவ்வேறு விபத்துக்களில் ஒருவர் பலி; மூவர் காயம்

தென்மராட்சியில் நேற்று நடைபெற்ற வெவ்வேறு விபத்துக்களில் ஒருவர் பலியானதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை மிருசுவிலில் நடைபெற்ற வண்டில் மினிபஸ் மோதலில் நுணாவில் சாவகச்சேரியைச்சேர்ந்தஞான சங்கரி திவ்வியசங்கரி [வயது 14] என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வழியில் மரணமானார்.

இதேவேளை வெவ்வேறு பகுதிகளிலும் நடந்த பல்வேறு மோட்டார்சைக்கிள் விபத்தில் எவ். ஐ. அன்ரனி [வயது 35 - மிருசுவில்], எஸ். நவரட்ணம் [வயது 40] ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். மற்றொருவர் விபத்துக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ச]

## வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன வரிசை விபரம் 02.06.92

| | |
|---|---|
| சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம் | 4157 |
| சோதனை நிலையத்தை தாண்டிச் சென்ற வாகன வரிசை இலக்கம் | 3250 — 3275 |
| இராணுவம் அனுமதித்த வாகன வரிசை இலக்கம் | 3235 — 3250 |

★ இந்த விபரம் எமது பத்திரிகையில் தனியார் வாகன உரிமையாளர்களின் நலன்கருதி ஒவ்வொரு நாளும் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.


# ஓர் ஆண்டு நினைவஞ்சலி

## கந்தையா செல்வராசா (கர்ணன்)

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா செல்வராசா (கர்ணன்) அவர்களின் ஓர் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1937.3.16

மறைவு 1991.5.18

"தருமத்தின் உறைவிடமே"
பண்பின் சிகரமே
பாசத்தின் தீப ஒளியே

உங்கள் முகத்தொளி மங்கினாலும் உங்கள் முத்து வதனம் மறைந்தாலும் எம்மை ஆளாக்கிட்டு அரை நடுவில் இறைவனடி சேர்ந்த எம் ஆருயிர் அண்ணாவின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும்.

26/2 சிவநகர்
உருத்திரபுரம்

உடன்பிறந்தோர்,
தாய்
உற்றார், உறவினர்,

(2637)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம்ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.